1972 சனவரி 29]

கதர் கிராமத்தொழில் வாரியம்.

* 145 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் பணிகள் நகரத்தோடு நின்றுவிடாமல் கிராமங்களுக்கு எட்டுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆம்.

*146 வினா—திரு. என்: கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர்-கிராமத் தொழிலுக்காக 1971-72-ம் ஆண்டில் தமிழ் நாடு அரசு வழங்கிய உபரி மானியத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இன்னும் மானியம் வழங்கப்படவில்லை.

பிற மாநிலங்களிலிருந்து கதர் வாங்கல்.

* 147 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் நூற்பதற்கு வேண்டிய பஞ்சம் கதர்த் துணிகளுக்கு பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படுவதை தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.

திருப்பூர் கூட்டுறவு பண்டகசாலை.

* 148 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள கூட்டுறவு மத்திய பண்டகசாலை எப்போது துவங்கப்பட்டது?

(இ) 15-6-67-ம் தேதி முடிய எத்தனை முறை தணிக்கையும் சோதனையும் செய்யப்பட்டது?

(உ) இந்த சோதனைகளின் மூலமாக குற்றங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) 1962ல் இந்தப் பண்டகசாலை துவங்கப்பட்டது.

(இ) தணிக்கை ஆண்டுதோறும் நடைபெற்றது. 1966-ஆம் ஆண்டு கணக்குபற்றிய சோதனையும் நடைபெற்றது.

(உ) ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: இந்தத் தணிக்கையின் மூலம் அந்த நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிய வந்திருக்கிறதா? நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதை வசூலிக்க சம்பந்தப்பட்ட தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அது 1970-ம் ஆண்டு வரை இயக்குநர்களால் நடத்தப்பட்டு வந்தது. அதுவரை நஷ்டம் ரூ. 3,06,000. அதற்குப் பிறகு அரசாங்கம் தனி அதிகாரி போட்டு நடத்துகிறது. அதற்குப் பிறகு லாபம் ரூ. 9,000. முன்னால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய நடவடிக்கைகள் அரசின் ஆய்வில் இருக்கிறது.

Supermarkets

* 149 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Thanjavur Co-operative Wholesale Stores is operating a Supermarket in Thanjavur; and

(*b*) if so, details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) தஞ்சை சிறப்பங்காடிக்கு அரசு நிதி உதவி ரூ. 2,10,000 வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறப்பங்காடி ரூ. 50,000 லாபத்தில் சிறப்பாகவே நடைபெறுகிறது.

(Thiru K. M. Subramaniam rose.)

MR. DEPUTY SPEAKER: The main question relates to Thanjavur and the hon. Member should put a supplementary question relating to Thanjavur only.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, are the Government aware that these costly supermarkets and departmental stores are the luxuries of advanced countries and are mostly used by the upper middle classes. So, for the lower middle classes, will the Government think of opening cheaper sales shops?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, for the sake of middle classes, mini-supermarkets are being run. Already there are 29 such mini-supermarkets. We have now got sanction of the Central Government for another 100 such mini-supermarkets. These mini-supermarkets can cater to the needs of other middle class families.